

# தலைவர் ஜெகந்நாதம்

உழைக்கும் வர்க்கத்தாலும், பொதுமக்களாலும், நண்பர்களாலும் தலைவர் என் அழைக்கப்பெற்றவர் தாம் அமரர் திரு.ஜெகந்நாதம் அவர்கள்.

கோவையை அடுத்த பீளமேட்டில் 1-5-1917 ஆம் நாள் பிறந்தார். தந்தையார் திரு.வெங்கிடுசாமி, தாயார் திருமதி. வெங்கிட்டம்மாள்.

சிவந்த மேனி, நீண்ட கைகள், ஐந்தரை அடி உயரத்திற்கு தக்க பருமனான மேனி, எப்பொழுதும் அனைவரிடமும் அன்பாகப் பழகும் இயல்பு. இவற்றின் வடிவம் தான் தலைவர் திரு.ஜெகந்நாதம்.

அமரர் தியாகி என்.ஜி.இராமசாமி அவர்களின் ஆருயிர்த்தோழர். ஒருவகையில் உறவினரும் கூட. அவருடன் தொழிற்சங்க அமைப்பிலும் தொழிலாளர் போராட்டங்களிலும் பெரிதும் கலந்து கொண்டவர்.

காந்தி ஜி விடுத்த ஆணைப்படி தனி நபர் சத்தியாக்கிரகத்திலும், கள்ளுக்கடை மறியல், அன்னியத்துணி எரிப்பு, இறுதியாக "வெள்ளையன் வெளியேறு" இயக்கத்திலும் தியாகியடன் இணைந்து செயல்பட்டவர். பலமுறை சிறை சென்றவர். கோவை மத்திய சிறையிலும், வேலூர் சிறையிலும் அடைக்கப்பட்டவர்.

1938ல் கோவை ஜில்லா பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் பதிவு செய்யப்பட்டபோது, தியாகியுடன் இணைந்து செயல்பட்டவர்.

"வீர சுதந்திரம் வேண்டி நின்றார்?" , "பாரத சமுதாயம் வாழ்கவே!" முதலான பாரதியார் பாடல்களைப் பொதுக்கூட்டங்களில் உரத்த



குரலில் பாடுவார். உழைப்பவருக்கே உலகம் சொந்தம் என்னும் கருத்தை வற்புறுத்திக் கூறுவார்.

பீளமேடு பி.எஸ.ஜி தர்ம ஸ்தாபனத்தில் தச்சு வேலை பட்டறையிலும், ரங்கவிலாஸ் மில்ஸ் கார்டிங் டிபார்ட்மெண்டிலும் தொழிலாளியாகப் பணியாற்றினார்.

மாற்றாரை மதித்திடும் பண்பாளர், தம்மை எதிர்ப்பவரையும் அரவணைத்துச் செல்லும் மாண்பு உடையவர், பஞ்சாலைத் தொழிலாளர்கள் மட்டுமின்றி விவசாயத் தொழிலாளர்கள், பொதுமக்களிடம் - குறிப்பாக தாழ்த்தப்பட்டோரிடம் இனிமையாகப் பழகுபவர்.

காந்திஜி , நேருஜி, ஜெயப்பிரகாஷ் நாராயண், ஆச்சார்ய வினோபா பாவே, சுபாஷ் சந்திர போஸ், திலகர், பாரதி, திரு.வி.க. , வ.உ.சி. போன்றவர்களை மதிப்பிற்குரிய தலைவர்களாக ஏற்றுக் கொண்டவர்.

தியாகி என்.ஜி.இராமசாமி, கோவை திரு.டி.எஸ். அவினாசிலிங்கம் செட்டியார், கே.சுப்ரி, கர்மவீரர் காமராஜ், இராஜாஜி, வி.வி.கிரி, தந்தை பெரியார், முதல்வர் பிரகாசம் ஆகியோருடன் தொடர்பு கொண்டவர்.

தொழிலாளர்களுக்குடியிருப்பும், அவர்கள் குழந்தைகளுக்கு உயர்நிலைப் பள்ளியும் தேவை என்பதை உணர்ந்தார். தொழிலாளர்களின் ஒரு நாள் ஊதியத்தை சங்கத்தின் மூலம் நன்கொடையாகப் பெற்றார். 1954-55ல் பள்ளிக்கு 5,5 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது.



காந்திஜியின் சீடர், சர்வோதயத் தலைவர், புனிதர் ஆச்சார்ய வினோபா பாவை அவர்கள் வருகை தர திரு.S.R.சுப்பிரமணியம் அவர்கள் முன்முயற்சி மேற்கொண்டார்.

24-5-1959 ஆம் நாள் தியாகி என்.ஜி.இராமசாமி நினைவு உயர்நிலைப்பள்ளி 90 மாணவ , மாணவியருடன் தொடங்கப்பட்டது. தலைவரின் முழு முயற்சியால் லாக் நாயக ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் விழாவில் கலந்து கொண்டு பள்ளியைத் தொடங்கி வைத்தார்.

தொழிலாளர் நலனைக் கருத்தில் கொண்டு குடியிருப்புகள் அமைக்கப்பாடுபட்டார். பீளமேட்டில் ஒரு குடியிருப்பு கட்டப்பட்டது. அதனை அந்நாளைய முதல்வர் திரு.எம்.பக்தவச்சலம் அவர்கள் திறந்து வைத்தார். வரதராஜபுரத்தில் என்.ஜி.ஆர் தொழிலாளர் குடியிருப்பு அமைக்கப்பட்டது. அதனை அந்நாளைய தொழிலாளர் அமைச்சர் ஆரா.வெங்கட்ராமன் அவர்கள் திறந்து வைத்தார்.

பீளமேடு பஞ்சாயத்துத் துணைத்தலைவராக 1953 முதல் 1964 வரை பணியாற்றினார்.

1956 முதல் 1964 வரை தியாகி என்.ஜி.இராமசாமி கல்வி அறக்கட்டளையின் தலைவராகவும், பள்ளியின் தாளாராகவும் பணியாற்றினார்.

12-12-1964 அன்று அன்புத் தலைவர் அமரரானார். நொய்யல் நதிக்கரையில் தியாகி என்.ஜி.இராமசாமி அவர்கள் தகனம் செய்யப்பட்ட இடத்திலேயே தலைவரின் உடலும் தகனம் செய்யப்பட்டது.



அன்னாரின் அஸ்தி இராமேஸ்வரத்தில் 21-12-1964 அன்று கடலில் கரைக்கப்பட்டது.

அன்னாரது பூத உடல் மறைந்தாலும் அவர் புகழுடல் என்றும் மறையாது.

*-*-*